# முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

முதல் பக்கத் தொடர்ச்சி...

வைத்திருந்தால் அந்தப் பெயரோடும் சாதி இருக்கக் கூடாது என்று சொல்லப் பட்டு இருந்தது. இதனை தமிழ்நாடு அரசு நன்கு பரிசீலித்தது.

நமது சமுதாயத்தின் பல்வேறு பின் தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் தொடர்ந்து கல்விப் பயின்றிட, நமது மாநிலமெங்கும் பல் வேறு அரசுத் துறைகளின்கீழ் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவி யர் விடுதிகள் செயல்பட்டு வருகின் றன. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிக வும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் துறையின்கீழ் செயல் பட்டு வரும் 727 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் 41,194 மாணவ மாணவிகளும், 455 மிகப் பிற்படுத்தப் பட்டோர் நல விடுதிகளில் 26,653 மாணவ, மாணவிகளும், 157 சீர்மரபினர் விடுதிகளில் 9,372 மாணவ, மாணவிகளும், 20 சிறு பான்மையினர் நல விடுதிகளில் 1,250 மாணவ, மாணவிகளும் தங் கிப் பயின்று வருகின்றனர். ஆதிதிரா விடர் மற்றும் பழங்குடியினர் நலத்து றையின் கீழ் செயல்பட்டு வரும் 1,332 ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகளில் 98,909 மாணவ, மாணவியர்க ளும், 48 பழங்குடியினர் விடுதிகளில் 2,190 மாணவ, மாணவியர்களும் சேர்ந்து பயின்று வருகின்றனர்.

**2,739 விடுதிகளில் 1,79,568 பேர் பயன்!**

இவ்வாறு மொத்தமாக தமிழ்நாடு முழுவதும் உள்ள 2,739 விடுதிகளில் 1,79,568 மாணவ மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர். இந்த மாணவ,மாணவிகளின்முன்னேற்றத் திற்காகப் பல்வேறு நடவடிக்கைக ளைக் கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. இந்த மாணவர்களுக்கான உணவுச் செலவு மற்றும் பல்வேறு படிகளை உயர்த்தியது, விடுதிகளின் கட்ட மைப்பு மேம்பாடு, அவர்களுக்குச் சிறப்புத் திறன் பயிற்சிகள் போன்ற பல் வேறு முன்னோடி முயற்சிகளின் கார ணமாக மாணவர்களின் கற்கும் திறன் மேம்பட்டு உள்ளது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள அடித்தட்டுக் குடும்பங்களைச் சார்ந்த இந்த மாணவர்களின் வாழ் வில் ஒளியேற்றும் அதே வேளையில், நமது எதிர்கால சமுதாயத்தை ஒரு சமத்துவ சமூகமாக உருவாக்கிட, சாதி சமய உணர்வுகளைக் களைவது இன்றியமையாதது. இந்த நோக்கத் தோடு தமிழ்நாடு அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் தொடர்ச் சியாக, தற்போது பல்வேறு சாதி சம யப் பிரிவுகளின் பெயர்களின்கீழ் செயல்பட்டு வரும் மாணவர் விடுதி களின் பெயர்களை மாற்றிட தமிழ் நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி, பல்வேறு துறை களின் கீழ் செயல்பட்டு வரும் ஏழை மாண வர்களுக்கான பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் 'சமூகநீதி விடுதிகள்' என்ற பொதுப் பெயரால் இனி அழைக்கப்படும்.

**சலுகைகள் - உரிமைகள் தொடரும்!**

விடுதிகளுக்கு புதிய பெயர் சூட்டப்பட்டுள்ளதே தவிர, மாணவர்க ளுக்கான உரிமைகள், சலுகைகள், உதவிகள் அனைத்தும் அப்படியே தொடரும். அதில் எந்த மாற்றமும் இருக்காது.

இவ்விடுதிகளில் நமது பெரும் தலைவர்களின் பெயர் சூட்டப்பட்டு செயல்பட்டு வரும் சில விடுதிகளும் உள்ளன. அந்த விடுதிகள் அத்தலை வர்களின் பெயரோடு 'சமூகநீதி விடுதி' என்று சேர்த்து அழைக்கப்படும்.

தற்கால இளம் சந்ததியினர் அனை வரும் சாதி வேறுபாடின்றி ஒன்றி ணைந்து, எதிர்கால தமிழ்ச் சமுதா யத்தை, சமத்துவச் சமுதாயமாகக் கட்டமைத்திட இந்த முயற்சிகள் அடித் தளம் அமைக்கும்.

சமூகநீதி - சமநீதி - சட்ட நீதி ஆகி யவை அனைவர்க்கும் பொது என்ற நிலையை உருவாக்க 'திராவிட மாடல்' அரசு தொடர்ந்து பங்காற்றும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறி யுள்ளார்.



இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டம் அரியநாயகபுரத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் மறைந்த பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களின் உடலுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# 729 வீடுகள்: முதல்வர் திறந்து வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

இதில் முதற்கட்டமாக 3510 புதிய வீடுகள் 180 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் 19 மாவட்டங்களில் உள்ள 35 முகாம்களில் கட்டுவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டு, இவற் றில், ஏற்கனவே 18 மாவட்டங்களில் உள்ள 32 முகாம்களில் கட்டிமுடிக்கப் பட்ட 2781 புதிய வீடுகள் பயனாளிக ளுக்கு ஒப்படைக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, விழுப்புரம் மாவட்டம் - கீழ்புத்துப்பட்டு, திருப்பூர் மாவட்டம் - திருமூர்த்தி நகர், சேலம் மாவட்டம் - தம்மம்பட்டி, தருமபுரி மாவட்டம் - நாகாவதி அணை மற்றும் கேசர்குளி அணை, விருதுநகர் மாவட் டம் - கண்டியாபுரம் ஆகிய ஆறு இடங் களில் உள்ள இலங்கைத் தமிழர் மறு வாழ்வு முகாம்களில் 38 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட் டுள்ள 729 வீடுகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், மேற்கண்ட இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 7 கோடியே 33 இலட்சம் ரூபாய் செல வில் சாலைகள், மின்சார வசதி, கழிவு நீர் கால்வாய், குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளும் செய்துதரப்பட் டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், வருவாய் மற் றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறை செய லாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறு வாழ்வுத்துறை ஆணையர் முனை வர் மா.வள்ளலார், பொதுத்துறை சிறப்பு செயலாளர் சஜ்ஜன்சிங் ரா. சவான் மற்றும் அரசு உயர் அலுவலர் கள் கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்ற, சட்டமன்றங்களில்

# இஸ்லாமியர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம்!

## மனிதநேய மக்கள் கட்சி மாநாட்டில் வலியுறுத்தல்!

மதுரை, ஜூலை. 8-

உள்ளாட்சிகள் முதல் நாடாளுமன்றம் வரை சிறு பான்மையினரின் பிரதி நிதித்துவத்தை உறுதி செய்ய வேண்டும், வக்பு வாரிய திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி, மதுரையில் மனித நேய மக்கள் கட்சி மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா தலைமை வகித்தார். மாநி லப் பொருளாளர் உமர் வரவேற்றார்.

கட்சியின் பொதுச் செய லாளரும், எம்.எல்.ஏ. வுமான அப்துல்சமது பேசும்போது, "நாட்டில் படிப்படியாக முஸ்லிம்க ளின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் சதி நடக்கிறது. உள்ளாட்சி அமைப்புக ளில் சதி செய்து பிரதி நிதித்துவம் குறைக்கப்படு கிறது. நாட்டில் அடுத்த 10 ஆண்டுகளில் முஸ்லிம்க ளுக்கு உரிய பிரதி நிதித்துவம் கொண்டு வரப் பட வேண்டும்" என்றார்.

மாநாட்டில், தமிழ் மையம் நிறுவனர் ஜெகத் கஸ்பர்ராஜ், ஜோதிமலை இறைப்பணி திருக்கூடம் நிறுவனர் திருவடிக்குடில் சுவாமிகள் ஆகியோர் பேசினர். பேராசிரியர் அரு ணன், வழக்கறிஞர் ஹென் றிடிபேன், முன்னாள் எம் எல்ஏ முருகவேல்ராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, மதுரை பாண்டிகோயில் சந்திப்பு பகுதியிலிருந்து மாநாட் டுத் திடல் வரை பேரணி நடைபெற்றது. மாநிலத் தலைவர் ஜவாஹிருல்லா தலைமை வகித்தார். மாநாட்டுத் திடலை பேரணி அடைந்ததும், அங்கு கட்சிக் கொடியை ஏற்றிவைத்தார். மாநாட் டில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்:

நாடாளுமன்றம், சட் டப்பேரவைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புக ளில் முஸ்லிம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்க, அனைத்து அரசியல் கட்சிக ளும் கொள்கை முடி வெடுத்துச் செயல்படுத்த வேண்டும்.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்து, முஸ்லிம்களுக்கான அரசியல் பிரதிநிதித் துவத்தை உறுதி செய்ய வேண்டும், மின்னணு வாக் குப்பதிவு முறையில் வெளிப்படைத் தன்மை இல்லை. இம்முறை தொடர்வது ஜனநாயகத் துக்கு பேராபத்து. எனவே, வாக்குச்சீட்டு முறையைக் கொண்டு வர வேண்டும்.

இஸ்ரேலுக்கு அளித்து வரும் ஆதரவை மத்திய பாஜக அரசு கைவிட்டு, நாட்டில் உள்ள இஸ்ரே லிய நிறுவனங்களை வெளி யேற்ற வேண்டும், வக்பு வாரிய திருத்த சட்டத்தை ரத்து செய்ய வேண்டும். சென்னை புழல் சிறையில் விசாரணைக் கைதிகள் மீது தாக்குதல் நடத்திய அதிகா ரிகள் மீது நடவடிக்கை எடுத்து, நீண்ட நாள் சிறை வாசிகளுக்கு ஜாமீன் வழங்க வேண்டும். திருப்ப ரங்குன்றம் மலை மேல் உள்ள சிக்கந்தர் தர்கா வைப் பாதுகாக்கவும், அங்கு அடிப்படை வசதிக ளைச் செய்து, மலைப் பாதையைச் செப்பனிட வும் தமிழக அரசு நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மா னங்கள் நிறைவேற்றப் பட்டன.

### விஜயகுமார் தலைமை! செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞரணி சார்பில்

# நரசிங்கராயன் பேட்டையில் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

## சேலம் கோவிந்தன் – செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை!

செஞ்சி ஜூலை 8-

செஞ்சிகிழக்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார் பில் முத்தமிழறிஞர் கலை ஞரின் பிறந்தநாள் விழா, நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம்ந ரசிங்கராயன் பேட்டை நடைபெறுகிறது. தலை மைக் கழக பேச்சாளர் சேலம் கோவிந்தன், விழுப் புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப் புரை ஆற்றுகின்றனர். செஞ்சி ஒன்றிய பெருந்த லைவர் விஜயகுமார் தலைமை தாங்குகிறார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞ ரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்க ளின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான் காண்டு சாதனைகள் விளக்க தெருமுனைப் பிரச் சாரக் கூட்டம் நரசிங்கரா யன் பேட்டைஊராட்சி கலைஞர் திடலில் நாளை (9.7.2025புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு நடை பெறுகிறது.

கூட்டத்திற்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவ ரும், செஞ்சி கிழக்கு ஒன் றிய செயலாளர் விஜய குமார் தலைமை தாங்குகி றார். செஞ்சி கிழக்கு ஒன் றிய இளைஞரணி அமைப் பாளர் ஜம்போதி பழனி அனைவரையும் வரவேற்கி றார். செஞ்சி கிழக்கு ஒன் றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சரவ ணன், ஜெய பாரத் குமார் ,முரளி கிருஷ்ணன், ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் சேலம் கோவிந்தன், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப் பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் ஆகி யோர் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துரைக்கின்ற னர்.

கூட்டத்தில் மாநில விவ சாய அணி இணைச் செய லாளர் செந்தமிழ் செல் வன், மாவட்ட இளைஞ ரணி அமைப்பாளர் ஆனந்த், ஒன்றிய செயலா ளர்கள் செஞ்சி மதியம் விஜயராகவன், மேற்கு பச் சையப்பன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண் ணன், மாவட்ட கவுன்சி லர் அரங்க ஏழுமலை, மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரிக ணேசன், மாவட்ட கவுன்சி லர் அகிலா பார்த்திபன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், ஒன்றிய குழு துணை தலைவர் ஜெயபா லன், மாவட்ட மாணவ ரணி அமைப்பாளர் பிர சன்னா, செஞ்சி நகர செயலாளர் கார்த்திக், அனந்புரம் நகர செயலா ளர் சம்பத், அனந்தபுரம் பேரூர் தலைவர் முருகன், செஞ்சி பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜ லக்ஷ்மி செயல்மணி, அனந் தபுரம் அமுதா கல்யாண் குமார், மாவட்டம் மகளிர் அமைப்பாளர் திலகவதி விஜயகுமார், மாவட்ட சிறுபான்மையினர் நலணி துணை அமைப்பாளர்கள் மாத்தூர் தாஸ்,சௌகத் அலி, மாவட்ட விளை யாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வாகித், பாசன சங்க தலை வர் மணிவண்ணன், ஒன் றிய விவசாய அணி ஜி. சர வணன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர் .பழனி, இளைஞரணி வியாகத் அலி கலந்து கொண்டுசிறப்பிக்கின்ற னர்.செஞ்சி கிழக்கு ஒன் றிய இளைஞரணி துணை அமைப்பாளரும், முன் னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன் அனைவருக்கும் நன்றி கூறு கிறார்.




தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்டம் சார்பில் மகளிர் விடியல் பயணம் திட்டத்தின் கீழ் புதிய வழித்தடம், வழித்தட மாற்றம் மற்றும் வழித்தட நீட்டிப்பு பேருந்து சேவைகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேற்று (07.07.2025) சேலம், பழைய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் எஸ்.ஜோசப் டயஸ் ஆகியோர் உள்ளனர்.

### நிதி ஒதுக்கீட்டில் ஓரவஞ்சனை, மும்மொழிக் கொள்கை என தொடர்ந்து பா.ஜ.க. அரசு துரோகச் செயல்!

# தமிழகம் மறக்க முடியாத பாடம் புகட்டும் என்பது உறுதி!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூலை. 8-

ஓரவஞ்சனை மும்மொழிக்கொள்கை, கீழடி உள்ளிட்ட தமிழ் மக்களின் பழமை நாகரீ கத்தை ஏற்றுக் கொள்ளா மல் இழுத்தடிப்பது என பா.ஜ.க. அரசின் துரோகச் செயல்களுக்கு தமிழகம் மறக்க முடியாத பாடம் புகட்டும் என்பது உறுதி என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கருத்து தெரிவித்துள்ளது.



தினகரன்

ஜூலை 7, 2025 திங்கட்கிழமை

பாஜவிற்கு பாடம்

இந்தி எதிர்ப்பு போராட்டம் என்பது இந்தியாவில் ஆண்டாண்டு காலமாக பல்வேறு மாநிலங்களில் நடந்து வருகிறது. இதற்கான மூல விதை சென்னை மாகாணத்தில் 1930களில் போடப் பட்டது. இப்போது இந்தி பேசும் மக்கள் பரவலாக வாழும் மகாராஷ்டிரா மாநிலத்தில் கூட இந்தி எதிர்ப்புக்கான குரல்கள் பலமாக ஒலிக்க தொடங் கியுள்ளன. இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி மொழியை திணிப்பது இன்று, நேற்றல்ல, காலம் காலமாக நடந்தேறி வருகிறது. 1937 தொடங்கி 1940ம் ஆண்டு வரை தமிழகத்தில் இளைஞர்கள், மாணவர்கள் இந்தி திணிப்பை எதிர்த்து வீதியில் இறங்கி போராட்டங்கள் நடத்திய வரலாறு உண்டு. திராவிடர் கழகமும், திமுகவும் இந்தி எதிர்ப்பில் தீவிரமாக பங்காற்றின.

கடந்த 11 ஆண்டு காலமாக இந்தியாவில் பாஜ வின் ஆட்சிக்காலத்தில் இந்தியை எப்படியாவது தேசிய மொழியாக மாற்றிவிடுவது என்ற வைராக் கியத்தோடு, ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது. மும்மொழி கொள்கை, பாடங்களில் இந்தியை மறைமுகமாக புகுத்துவது, ஒன்றிய அரசு அலுவல கங்களில் இந்தி இடம் பெறுவது என ஒன்றிய அரசின் பல திட்டங்கள் இந்தியை அனைத்து மாநிலங்களிலும் திணிப்பதாகவே உள்ளது.

அது வருமாறு:-

இந்தி எதிர்ப்பு போராட் டம் என்பது இந்தியாவில் ஆண்டாண்டு காலமாக பல்வேறு மாநிலங்களில் நடந்து வருகிறது. இதற் கான மூல விதை சென்னை மாகாணத்தில் 1930களில் போடப்பட்டது. இப் போது இந்தி பேசும் மக் கள் பரவலாக வாழும் மகா ராஷ்டிரா மாநிலத்தில் கூட இந்தி எதிர்ப்புக்கான குரல்கள் பலமாக ஒலிக்க தொடங்கியுள்ளன. இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி மொழியை திணிப் பது இன்று, நேற்றல்ல, காலம் காலமாக நடந்தேறி வருகிறது. 1937 தொடங்கி 1940ம் ஆண்டு வரை தமிழ கத்தில் இளைஞர்கள், மாணவர்கள் இந்தி திணிப்பை எதிர்த்து வீதி யில் இறங்கி போராட்டங் கள் நடத்திய வரலாறு உண்டு. திராவிடர் கழக மும், திமுகவும் இந்தி எதிர்ப்பில் தீவிரமாக பங் காற்றின.

கடந்த 11 ஆண்டு கால மாக இந்தியாவில் பா.ஜ. வின் ஆட்சிக்காலத்தில் இந் தியை எப்படியாவது தேசிய மொழியாக மாற்றி விடுவது என்ற வைராக்கி யத்தோடு, ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது. மும்மொழி கொள்கை, பாடங்களில் இந்தியை மறைமுகமாக புகுத்துவது, ஒன்றிய அரசு அலுவலகங் களில் இந்தி இடம் பெறு வது என ஒன்றிய அரசின் பல திட்டங்கள் இந்தியை அனைத்து மாநிலங்களி லும் திணிப்பதாகவே உள் ளது. தமிழ்நாட்டு பள்ளிக ளிலும் இந்தியை கற்பித்தால் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்வோம் என ஒன்றிய அரசு கூறி வருகி றது. இதை எதிர்த்து தொடர்ந்து தமிழக அரசு குரல் கொடுத்து வருகிறது.

இந்நிலையில் தமிழகத் தின் போராட்டங்களை இப்போது மகாராஷ்டிர மாநிலமும் கையில் எடுக்க தொடங்கியுள்ளது. இந்தி திணிப்புக்கு எதிராக உத் தவ் தாக்கரே தலைமையில் மும்பையில் நடந்த பேர ணியிலும், பொதுக்கூட் டத்திலும் மாரட்டிய மக்க ளின் எழுச்சி நேரடியாகவே தெரிந்தது. மராட்டிய மக்க ளின் இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தை கண்டு இப்போது பா.ஜ. அரசே பம்முகிறது. உத்தர பிரதேசத்திலும், ராஜஸ்தா னிலும் பொதுமக்கள் இந்தி படித்தும் மக்கள் முன் னேற்றம் கண்டுவிட்டார் களா என்றால் இல்லை. இந்தியையும், சமஸ்கிருதத் தையும் எப்படியாவது இந் தியா முழுவதும் கொண்டு சென்றுவிட வேண்டும் என்கிற ஒன்றிய அரசின் ஒரே குறிக்கோள் நிச்சயமாக பலிக்க போவ தில்லை. இந்தியை காட்டி லும் தமிழ் தொன்மை யான இலக்கிய மொழி யாகும். மற்ற இந்திய மொழிகள் எல்லாம் சமஸ் கிருதத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை யாக இருந்தும், தமிழ் மொழி மட்டும் சமஸ்கிரு தத்தின் துணையில்லாமல் தனித்து இயங்க கூடியதாக உள்ளது.

தமிழகத்திலும் சமஸ்கி ருத பேச்சு வழக்குகளும், சமஸ்கிருத மந்திரங்கள் நிலை கொண்டபோதும், அதற்கான எதிர்ப்புகளும் அதிகம் எழுந்தன. இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பி ஏற்கும் வரை ஆங் கிலமே தொடரலாம் என முன்னாள் பிரதமர் நேரு, இந்தியை யார் மீதும் திணிக்காமல் நாட்டின் பன்முக தன்மையை காத் தார். ஆனால் கடந்த 11 ஆண்டுகாலமாக பிரதமர் மோடி இந்தியை தமிழகம் உள்ளிட்ட அனைத்து மாநி லங்களிலும் திணிப் பதையே நோக்கமாக கொண்டுள்ளார். உலக தொடர்பு மொழியான ஆங்கிலமே தமிழர்களுக்கு இன்றளவும் உலகளவில் வேலைவாய்ப்புகளை அள்ளி தரும் நிலையில், இந்தியை திணிப்பது எவ்வி தத்திலும் ஏற்று கொள்ள முடியாததாகும்.

தமிழகத்திற்கு நிதி ஒதுக் கீட்டில் ஓர வஞ்சனை, மும்மொழி கொள்கை, கீழடி உள்ளிட்ட தமிழ் மக் களின் பழமை நாகரீகத்தை ஏற்றுக் கொள்ளாமல் இழுத்தடிப்பது என பா.ஜ. அரசின் துரோக செயல்க ளுக்கு தமிழக மக்கள் பாடம் புகட்டிக் கொண்டே இருக்கின்ற னர். ஒன்றிய அரசு தனது நிலைப்பாட்டில் விடாப்பி டியாக இருந்தால், வருங் காலத்திலும் பா.ஜ.விற்கு தமிழகம் மறக்க முடியாத பாடங்களை புகட்டும் என் பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அத்தலையங் கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின் படி சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட வாடிப்பட்டி பேரூர் பெருமாள்பட்டி கிராமத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை பணிகளை தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் முன்னிலையில் துவக்கி வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் பால்பாண்டியன், பூச்சம்பட்டி சீனிவாசன், கணேசன், அரவிந்தன், அயோத்தி, எல்லையூர் அய்யாவு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.